பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 24 (7—2—68) புதன் ★ வெளியூர்: தை 25 (8—2—68) வியாழன் [இதழ்: 196

கருச்சிதைவுச் சட்டம் தளரும்!

வருகிற நிதி நிலைத் தொடர்க் கூட்டத்தில் கருச்சிதைவுச் சட்டத்தைத் தளர்த்துகின்ற வகையில் சட்டம் ஒன்று கொண்டுவரப்படவிருப்பதாக மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திர சேகர் தெரிவித்தார்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்காக அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளதாமாக முன்வரும் பணியாளர்களுக்கு டிரான்சிஸ்டர் பரிசு அளிப்பதென்ற திட்டம் குறித்து இங்குள்ள தொழிலதிபர்களுடன் மத்திய சுகாதார அமைச்சர் விவாதிக்க இருப்பதாகவும் தெரிகிறது.

இந்தி வெறியரின் புதிய போர்க்கோலம்

ஏழு மாநிலங்களில் இந்தியைத் திணித்தாக வேண்டுமாம்

இல்லையேல் முதலமைச்சர்களை எதிர்த்து முற்றுகையாம்!

தன்பாத், பிப். 6—

நாடாளுமன்ற உறுப்பினரும், இந்தி வெறியருமான சேத் கோவிந்த தாஸ், இப்போது இந்தித் திணிப்புக்காகப் புதியதொரு 'போர்க் கோலம்' பூண்டிருக்கிறார்!

இந்தி பேசும் ஏழு மாநிலங்களிலும் உடனடியாக இந்தியை எல்லா அரசு அலுவலகங்களிலும் பயன்படுத்தத் தவறினால், அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களைச் சுற்றிவளைத்துக் 'கேரோ' போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளாராம்!

இந்தப் புதிய போராட்டத்தின் மூலம் கைதாகும் முதல் ஆளாகத் தாமே இருக்கப்போவதாகவும், வயதைப் பற்றிக் கவலைப்படாமல் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அவர் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

இந்தியா முழுவதிலும் இந்தியை எதிர்க்கும் கட்சி தி. மு. கழகம் ஒன்றே ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

இராஜா ராம் மோகன் ராய், பங்கிம்சந்திர சாட்டர்ஜி, பாயிகங்காதர திலகர் போன்ற தேசியத் தலைவர்களெம்லாம்கூட இந்திக்கு ஆதரவளித்திருப்பதாகவும் கூறி, தமது போராட்டத்துக்கு நியாயம் கற்பித்திருக்கிறார் அவர்.

கேரளம், ஆந்திரம், மேற்கு வங்கம் உட்பட எந்த ஒரு மாநிலமும் இந்தியை எதிர்க்கவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சேத் கோவிந்த தாஸ் குறிப்பிடும் இந்தி பேசும் ஏழு மாநிலங்கள்—பீகார், உ.பி., ம.பி., டில்லி, அரியானா, இராஜஸ்தானம், இமாசலம் பிரதேசம் ஆகியவையேயாகும்.

விண்வெளியில் ரஷ்ய செயற்கைக்கோள்!

மாஸ்கோ, பிப். 7—

'காஸ்மாஸ்—201' என்ற செயற்கைக்கோள் ஒன்றை, விண்வெளியித இரஷ்யா செலுத்தியிருக்கிறது.

காமராசர் செய்யத் தவறியது

மு. கருணாநிதி இடித்துரை

சேலம், பிப். 6—

"காமராசர் காங்கிரசுத் தலைவராக இருந்தபோது, தம்முடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சி மொழி மசோதாவுக்குப் புதுத் திருத்தம் எதுவுமில்லாமல் நிறைவேற்றும்படிச் செய்திருக்கலாம்; ஆனால் அவர் அப்படிச் செய்யத் தவறிவிட்டார்"

என்று பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் இங்கு நடந்த கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் குறிப்பிடடதாவது:—

"மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்களைப் பெற தி.மு. கழகம் முயற்சி செய்யும்.

"போக்குவரத்து, தற்காப்பு, வெளிநாட்டு விவகாரம் ஆகியவை மட்டும் மத்திய அரசிடமிருந்தால் போதும்."

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதற்குக் காரணம்?

தலைமையமைச்சர் இந்திராவிடம் அந்தமான் தி.மு. கழகத் தோழர்கள் விளக்கம்

போர்ட்பிளேயர், பிப். 6—

"தலைமையமைச்சர் இந்திரா அந்தமான் வருகையை முன்னிட்டு இங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்களை முன்னதாகக் கைது செய்ததைக் கண்டித்தே இங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது"

என்று தி.மு கழகத் தொழிற்சங்கத் தலைவர்கள் தலைமையமைச்சர் இந்திராவிடம் தெரிவித்தனர்.

கழகப் பிரதிநிதிகளுக்குத் தலைமையமைச்சர் ஒரு மணி நேரம் பேட்டியளித்தார்; அச்சமயத்தில் கழகத் தொழிற்சங்கத் தலைவர்கள் தலைமையமைச்சரிடம் இவ்வாறு விளக்கம் தந்தனர்.

"உங்களது வருகையை முன்னிட்டு, எங்கள் கட்சித் தலைவர்களை முன்கூட்டியே கைது செய்தார்கள்; இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டியதாகிவிட்டது"

என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

22 இடங்களில் காங்கிரசு தோல்வி!

நகராட்சித் தேர்தலில் பல இடங்களை இழந்தது!

அவுரங்காபாத், பிப். 6—

அவுரங்காபாத் நகராட்சித் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பெரும் தோல்வியடைந்தது.

37 இடங்களில் காங்கிரசு 15 இடங்களில்தான் வெற்றிபெற்றது.

கடந்த நான்கு தடவைகளில் நடைபெற்ற தேர்தல்களில் இப்போதுதான் முதன்முதலாகக் காங்கிரசு தோல்வியடைந்தது!

பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் போராட்டம்!

ஐதராபாத், பிப். 6—

உஸ்மானியா பல்கலைக் கழக சிண்டிகேட் கூட்டம் தொடங்குவதற்குமுன் இப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள், டீன்கள் ஆகியோர் பஞ்சப் படியை உயர்த்தக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியது இதுதான் முதல் தடவையாகும்.

ஆசிரியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து விடுமுறை எடுத்துக் கொண்டார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்களும் கலந்துகொண்டார்கள்.

இந்திரா காந்தியை முற்றுகையிடுவாராம்

இன்னொரு இந்தி வெறியரின் பிதற்றல்!

விரைவில் இந்தியை நாட்டின் ஆட்சிமொழியாக ஆக்காவிட்டால் டெல்லிக்குச் சென்று தலைமையமைச்சர் இந்திரா காந்தியைச் சுற்றிவளைத்து முற்றுகைப் போராட்டம் நடத்தப்போவதாக, இன்னொரு இந்தி வெறியரான தயாள் பாண்டே தன்பாத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

பீகாரில் எல்லா அரசு அலுவல்களும் மார்ச்சு மாதத்துக்குள் இந்தியில் நடைபெற்றாக வேண்டும் என்றும் அதற்குள் எந்தப் பொது இடத்திலும் ஆங்கிலப் பெயர்ப் பலகை இருக்கக்கூடாது என்றும், மோட்டார் எண் தகடுகளிலும் இந்தியிலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும், இந்தக் காரியங்களெல்லாம் நடந்தால், 'கறுப்புச் சட்டமான மொழிச் சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெறுமாறு செய்யலாம்' என்றும் அவர் பிதற்றியிருக்கிறார்.

உள்ளதைப் பேசுவதன் பலன்!

அமைச்சருக்கே சி. ஐ. டி. போடும் நிலை!

சென்னை, பிப். 7—

"கற்றறிந்த மேதைகள் அரசியலில் ஈடுபட்டால்தான் நாட்டுக்கு நன்மை கிடைக்கும்; இல்லாவிட்டால், ஏமாற்றுக்காரர்கள்தான் ஆட்சிக்கு வருவார்கள்!

"சமுதாயத்திற்கு எது தேவையோ அதைத் தெளிவாகவும், தைரியமாகவும் சொல்லும் நிலைமை வரவேண்டும்; ஏதாவது ஒரு கொள்கை பற்றியோ, பிரச்சினையைப் பற்றியோ உண்மையை எடுத்துச் சொன்னால், 'ஓட்டுக் கிடைக்காது' என்று சொல்லுகிறார்கள்; 'வெளிப்படையாகச் சொல்லிவிட்டால் கட்சிக்குச் செல்வாக்குக் குறைந்துவிடும்' என்று சொல்லுகிறார்கள்.

"ஆனால் என்னைப் பொறுத்தவரையில், 'மக்களுக்கு எது நன்மையோ அதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று சொல்லி வருகிறேன்.

"அப்படிப் பேசுகின்ற காரணத்தினால், அமைச்சர்களுக்குக்கூட சி.ஐ.டி. போடக்கூடிய நிலைமை நாட்டில் உருவாகியிருக்கிறது!"

—அமைச்சர் செ. மாதவன்

(காப்டன் ஞானவொளிவு உருவப்படத் திறப்புவிழாவில்)

மாணவன் ராசேந்திரன் உருவச் சிலை!

அண்ணாமலை நகரில் அண்ணா திறந்துவைப்பார்

சிதம்பரம், பிப். 7—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது காங்கிரசு ஆட்சியின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகி உயிர்நீத்த மாணவர் இராசேந்திரனின் உருவச் சிலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னிலையில் நிறுவப்படும்.

பல்கலைக் கழகத்தின் முன்பாக உள்ள நெடுஞ்சாலையில் இந்தச் சிலையை நிறுவ அரசின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது; அதன் பொருட்டு பல்கலைக் கழக மாணவர்கள், அமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துத் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்து வேண்டுகோள் விடுத்தனர்.

மாணவர்களின் வேண்டுகோளை அமைச்சர் ஏற்றுக்கொண்டு ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

நாகர்கோயிலில் ரூ. 7,000 செலவில் சிலை வடிக்கப்பட்டுவிட்டது.

"சிலைத் திறப்புவிழா விரைவில் நடைபெறும்; அறிஞர் அண்ணா அவர்கள், இராசேந்திரனின் சிலையைத் திறந்துவைப்பார்" என்று பல்கலைக் கழக மாணவர் மன்றச் செயலாளர் கூறியுள்ளார்.

துவக்கப் பள்ளிகட்கு விஞ்ஞானக் கருவிகள்

தமிழக அரசின் மானியம்

தமிழ்நாட்டிலுள்ள 2 ஆயிரம் துவக்கப் பள்ளிகளுக்கும், 400 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் விஞ்ஞானச் சாதனங்களுக்காகத் தமிழக அரசு ரூ. 10-இலட்சம் அனுமதித்திருக்கிறது.

ஒவ்வொரு துவக்கப் பள்ளிக்கும் விஞ்ஞானச் சாதனத்துக்காக ரூ. 300 கிடைக்கும்.

உயர் துவக்கப் பள்ளிகளுக்குத் தலா ரூ. 1,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகம்
ஆசிரியர் : இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1999 தை 24 (7—2—68) புதன்

இது என்ன புத்தி?

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவராக சி. சுப்பிரமணியம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை, கழகத்தைச் சார்ந்தவர்களில் பலர் வரவேற்றனர். இரண்டொருவர் வெளிப்படையாக, அவரைப் பாராட்டி எழுதவும் செய்தனர்.

எதிர்க் கட்சியாகப் பணிபுரியக்கூடிய வாய்ப்பு இப்பொழுது தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கு கிடைத்திருக்கிறது; எனவே, இத் தருணத்தில் அக்கட்சியின் தலைவராக சுப்பிரமணியம் வந்திருப்பது தால், 'எனையசு ஆட்சி முறையில் பொறுப்புள்ள எதிர்க் கட்சி யாகச் செயல்படவேண்டிய முறையில் காங்கிரசுக் கட்சியை அவர் உருவாக்கக்கூடும்; 'எடுத்தேன்—கவிழ்த்தேன்' எனச் செயல் பட்டுவந்துள்ள காங்கிரசுக் கட்சியை அவர் திருத்தி அமைத்திடக் கூடும்' என்றெல்லாம், கழகத்தவர்களில் பலர் நம்பினர்.

'அந்த நம்பிக்கை தவறுனது' என, சுப்பிரமணியம் அவர்கள், நாள் தவறாமல் தாம் பேசிவருகின்ற பேச்சின்மூலம் மெய்ப்பித்துவரு கின்றார். குறிப்பாக, 'தமிழகக் காங்கிரசுக் கட்சியினர் எதையும் மறக்கமாட்டார்கள்; கற்கவேண்டியதைக் கற்றுக்கொள்ளவுமாட் டார்கள்' என்ற உண்மையை, அவர் உறுதிப்படுத்தியுங்கின்றார்.

சுப்பிரமணியம் அவர்கள் தமிழகக் காங்கிரசுக் கட்சிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரே தமிழக நகரங் கள் பலவற்றுக்குச் சென்று வந்தார். அவ்வுலாவின்போது தாம் கண்ட காட்சியினையும், பெற்ற படிப்பினையையும் அறிக்கையாக அவர் கொடுத்தார்.

அந்த அறிக்கையில், கழக ஆட்சியில் மக்களுக்கு அதிருப்தி வளர்ந்துவருவதாகவும், அதே நேரத்தில் காங்கிரசுக் கட்சியின்மீது மோகம் பிறக்திருப்பதாகவும் சுப்பிரமணியம் குறிப்பிட்டிருந்தார். பொதுவாகத் தமிழக மக்கள் அரசியல் துறையில் மனமாற்றம் பெற்றிருப்பதாகவும், அந்த மனமாற்றம், காங்கிரசுக் கட்சியை நோக்கித் திரும்பியிருப்பதாகவும் அவர் அறிவித்திருந்தார்.

'அவருடைய கூற்றுக்குத் துளியும் அடிப்படை கிடையாது' என்ற உண்மை, நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைத் தேர் தலின் வாயிலாக வெளிப்பட்டது. அடுத்தாற்போல் நடைபெற்ற சங்கரி சடபடி பேரவை இடைத் தேர்தல் முடிவும், சுப்பிரமணியத் தின் கூறைப் பொய்யாகவிவிட்டது.

தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னராவது, இட்டுக்கட்டிப் பேசும் தமது பழக்கத்தை, சுப் பிரமணியம் கைவிட்டிருக்க வேண்டும்; ஆனல், இயல்பை மாற்றிக் கொள்ளுவது எப்படிச் சாத்தியமாகும் ?

தமிழகத்தின் நிதி அமைச்சராக இருந்து சுப்பிரமணியம் அவர்கள் கழகத்தினமீது கூறிய கட்டுக்கதைகளும், உண்மைக்கு முழுவதும் மாருன பழிச் சொற்களேயும், ஏற்கனவே தமிழக மக்கள் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிருக்கின்றனர். 'கழகத்தின்மீது குற்றஞ் சுமத்துகின்ருர் சுப்பிரமணியம்' என்ருலே, 'அதில் கடுகள வும் உண்மை இருக்கமுடியாது' என, தம்மிச்சையாகவே முடிவு கட்டிக்கொள்ளத் தமிழக மக்கள் பழகிக்கொண்டிருக்கின்றனர்.

சேலத்தில் இரண்டு நாட்களுக்குமுன் காங்கிரசுப் பொதுக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது; அக்கூட்டத்தில் சுப்பிரமணியமும் கலந்துகொண்டு பேசியுள்ளார்.

அக்கூட்டத்தில் அவர் தம்மை ஒரு வரலாற்றுப் பேராசிரிய ராகக் கற்பனை செய்துகொண்டு பேசியிருக்கின்ருர். முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள்தொட்டு, தாம் தலைமையேற்றுள்ள கட்சி யைத் தமிழகத்தில் தலரமட்டமாக்கிவிட்ட இந்த நாள் கழகத்தின் வளர்ச்சி வரையில் குறிப்பிட்டிருக்கின்ருர்.

தமிழ் மக்களிடம் 'தவருன' பிரசாரம் செய்தே கழகம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பது, வரலாற்றுப் பேராசிரியர் சி. சுப்பிரமணியத்தின் கனிப்பு. கழகத்தின் பிரசாரம் 'தவருனது' என்ற 'உண்மை'யை உணர்ந்துகொள்ளக்கூடிய அறிவாற்றல் பெற்றிருப்பவர் தாம் ஒருவர்தான் என்ற நினப்பில் அவர் பேசி யிருப்பது, வியப்பளிப்பதாகும். தங்களுடைய 'அறிவை' இவ்வளவு தாழ்வாக மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்ற சுப்பிரமணியத்திற்கு, தமிழ் மக்கள்தான் இனியும் பாடம் கற்பிக்க வேண்டும்.

எதையாவது கூறி கழகத்துக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேதான், தமிழகக் காங்கிரசுக் கட்சியின் தலைவரான சுப்பிரமணியம் பேசிவருகின்ருர் என்பதுதான் உண்மை. கழகத்தின்மீது எந்தப் பொய்யையும் அவர் கூறத் துணி வார் என்பதையும் மறப்பதற்கில்லே.

அந்தச் சேலம் கூட்டத்தில், அண்மையில் வெற்றிகரமாக நடை பெற்று முற்றுப்பெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு வசூலிக்கப்பட்ட தொகை பற்றியும் ஒரு நம்பத்தகாத பொய்யை, சுப்பிரமணியம் கட்டவிழ்த்திருக்கின்ருர்; அதாவது, 'உலகத் தமிழ் மாநாட்டுக்கு வசூலிக்கப்பட்ட தொகை இரண்டு கோடிக்குமேல் இருக்கும்' என்று அவர் குறிப்பிட்டிருக்கின்ருர்.

உலகத் தமிழ் மாநாட்டுக்காக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு—அத்தொகையில் செலவழிந்தது எவ்வளவு—செலவுபோகக் மையிருப்பில் உள்ள தொகை எவ்வளவு என்பதற் கான புள்ளிவிவரத்தை, அரசாங்கம், வெளியிட்டிருக்கிறது. அர சாங்க அறிவிப்புப்படி, மாநாட்டிற்காக நன்கொடையாக வசூலிக் கப்பட்ட தொகை ரூ. 21-இலட்சமாகும், நீங்கள் திட்டமிட்ட தொகை பும்பரர் நிழற்சிலன்—ஊர்வலம்—மேடைக் கண்காட்சி—மாநாடு பற்றிய சிறப்பு மலர் முதலியவற்றிற்காக ரூ. 8 இலட்சம் செலவிட்டி பட்டிருக்கிறது ; திருக்குறள் ஆராய்ச்சிக்கென மதுரை, அண்ணு மலை, சென்னை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களுக்கும் ரூ. 3 இலட் சம் வீதம் மொத்தத்தில் ரூ. 9 இலட்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செலவு போக அரசாங்கக் கையிருப்பில் ரூ. 4 இலட்சம் இருக்கிறது—இது, தமிழக அரசு தந்துள்ள விவரம்.

நானையங் கேட்டவர்கள் நடவடிக்கை

ஒரு பத்தாண்டுக்கு முன்புவரை இந்தியை எதிர்ப்பதே ஒரு பெரிய 'தேசத் துரோக'க் குற்றமாக, இங்குள்ள காங்கிரசுக்காரர்களால் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் வெறுக்க வேண்டும் என்பதற்காகவே, தி.மு.க. மீது தேசத்துரோகக் குற்றச்சாட்டை அவர் கள் சுமத்திப் பார்த்தனர்; ஆனல் தமிழ் நாட்டு மக்கள், 'காங்கள் அவ்வளவுக்கு விவரம் தெரியாதவர்கள் அல்லர்' என்பதைத் தெளிவு படுத்திவிட்டனர்.

"இந்தியை எதிர்ப்பது எப்படிப்பட்ட குற்ற மானலுஞ் சரி—இந்தி எங்களுக்குத் தேவை யில்லே—அதனே எதிர்த்தே தீருவோம்' என்று மக்கள் ஒருமுகமாகத் தெரிவித்துவிட்டனர்.

"தி. மு. கழகம் மட்டும்தான் இந்தியை எதிர்க் கிறது ; மற்றவர்களெல்லாம் இந்தியை ஏற்றுக் கொண்டு, தங்கள் பிள்ளேகளே இந்தி படிக்க வும் செய்திருக்கிறர்கள்" என்ற சொத்தை வாதம் அடிபட்டுவிட்டது.

தி. மு. கழகம் மட்டுமல்ல—தமிழகத்திலுள்ள கட்சிகள் அனேத்தும்—காங்கிரசைத் தவிர—இந்தியை ஒருமுகமாக எதிர்க்கின்றன என் பது, கடந்த 1965-ல் நடந்த கிளர்ச்சியின் போதும், கடந்த பொதுத் தேர்தலின்போதும் திட்டவட்டமாக வெளிப்பட்டுவிட்டது.

'பள்ளியில் இந்தி மாணவர்கள் ஆர்வத்துடன் இந்தியை எடுத்துப் படிக்கிறர்கள்' என்பதும், 'பெற்ருேர்கள் தங்கள் பிள்ளேகள் இந்தி படிக்க வைக்க விரும்புகிறர்கள்' என்பதும், அண்மை யில் தமிழ்நாட்டுச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்குக் கிடைத்த வரவேற்பின் மூலமே அடிபட்டுப் போய்விட்டது.

'கல்வி நிலேயங்களிலிருந்து இந்தி அடியோடு கல்லி எறியப்பட்டது' என்ற செய்தி, தமிழக மாணவர்கள்செவியில் கெந்தேனுப்பாய்ந்ததன விளேவுதன், பிப். 5-ம் நாளன்று மாணவர்கள், பள்ளிகளுக்கு வந்து அமைதியாகத் தங்கள் படிப்பில் கவனஞ்செலுத்தத் தொடங்கியது.

சட்டமன்றத்தில் இந்த முடிவு எடுக்கப்படாம லிருந்தால், தமிழகமும் இன்று—ஆந்திரத்தைப் போலவும், கருநாடகத்தைப் போலவும்தான் கொந்தளிப்பு நிலேயில் காட்சியளிக்கும் என பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழக மக்களின் உள்ளத்தை—குறிப்பாக மாணவர்தம் உள்ளத்தைப் புரிந்துகொள்ளக் கூடிய ஆற்றல் வாய்ந்த அறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டதால்தான், நமக்கு இத்தகைய தொரு வெற்றி—'இங்கி ஒழிக்கப்பட்டது' என்ற சட்ட மன்றத் தீர்மானம்—கிட்டியது.

இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை வெளிப்படையாக எதிர்க்கவும் துணிவின்றி — ஆதரிக்கவும்— முடியாமல், 'ருேமே' வசிப்பது என்ற போரல் காங்கிரசுக்காரர்கள் நடந்துகொண்ட விதத் தையும் தமிழக மக்கள் உன்னிப்பாகக் கவனித் துக்கொண்தான் இருந்தார்கள். காங்கிரசின் சாயன் பொலுக்கு—அவர்களுடைய 'சய ருமம்' வெளிப்பட—இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது.

இவி இந்த 'மாமலா'க் காங்கிரசுக்காரர்களேத் தமிழக மக்கள் மட்டுமல்ல—மற்றத் தென்கக மக்கள் அனேவருமே நம்பப்போவதில்லே.

"தமிழ்நாட்டிலே மட்டுமே இந்திக்குச் சிறு எதிர்ப்பு இருக்கிறது ; அதுவும் தி.மு.க. மட்டுமே இந்தியை எதிர்க்கிறது" என்ற பிரசாரம் பொடிபொடியாக்கப்பட்டுவிட்டது.

இன்று ஆந்திரமும், கருநாடகமும் போர்க்கொடி ஏந்தி நிற்கின்றன! தி.மு.க. ஆரும் தமிழகத் தில்மட்டுமே அண்ணுவின் 'தீர்க்கதரிசன'மிக்க நடவடிக்கையின் விளேவாக அமைதி நிலவு கிறது.

தி. மு. க. இந்தியை எதிர்ப்பதால் அதன்மீது தேசத் துரோகக் குற்றஞ்சாட்டிய, பொதுமக் களுக்கு அதனிடத்திலுள்ள பிடிப்பை—செல் வாக்கைக் குறைத்துவிடலாம்—தடுத்துவிட லாம் என்ற நம்பிக்கை காங்கிரசாருக்கு அடி யோடு அற்றுப்போய்விட்டது! இனி இந்தியை ஆதரிப்பவன்தான் 'தேசத் துரோகி'—'தமிழ்த் துரோகி' என்ற முடிவுக்கு மக்கள் வந்து விட்டனர்!

இந்த நிலேமையை உணர்ந்துகொண்ட தமிழ் நாட்டுக் காங்கிரசுக்காரர்கள்—அதிலும் குறிப் பாகக் காமராசர், சுப்பிரமணியம் போன்ற 'பெருங் தலேவர்'கள், தி. மு. க. மீது இல்லாத ஒரு குற்றத்தைச் சுமத்தி, மக்களே திசை திருப்பிவிட்டு, தங்கள் 'இந்தி விசுவாச' நட வடிக்கைகளே அதன் மூலம் மறைத்துக் கொள்ள முயலுகின்றனர்.

'தி. மு. கழகத்தார் பிரிவினவாதிகள்' என்றும், 'அதனுல்தான இந்தியை ஒழித்துவிட்டனர்' என்றும் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டிப் பேசி வருகிறர் சுப்பிரமணியம்.

'தாய் மொழியும் ஆங்கிலமும் போதும் என்பவர் கள், பிரிவினவாதிகளாகத்தான் இருக்க முடி யும்' என்று அவர் கோபியல் பேசியருக்கிறர்.

தி. மு. கழகம் பிரிவினக் கொள்கையைக் கை விட்டு ஆண்டு பல ஆகிவிட்டன ; என்றுமுடி அவர், மக்களுக்கு இப்படி 'பிரிவினப் பூச் சாண்டியை காட்டிப் பார்க்கிறர்!

இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சியவர் களல்லர் தமிழ் நாட்டு மக்கள்—என்பதை, அவர் இன்னமும் உணர்ந்துகொள்ளாமல இருப்பதுதான் வியத்தையாக இருக்கிறது!

'நாடு பிரியக்கூடாது' என்பதற்காகத்தான், 'இங்கித் தினிப்புக் கூடாது' என்கிறர் அண்ணு எனபது நாடறிந்த உண்மையாகும்.

'நாடு பிரிந்தாலும் சலேயில்லே ; இந்தி மட்டுமே நாட்டின் ஆட்சிமொழியாக வேண்டும்' என் பது இந்தி வெறியர்களின் உயிர் இலட்சிய மாக இருந்துவருகிறது—அதற்குச் சான்று கான்கிரசுக் காரர்களும் தூபமிட்டு வருகிறர்கள்—என்ற உண்மை, யாருக்கும் தெரியாத ஒன்றல்ல.

தீவிர இந்தி ஆதரவாளராக வடநாட்டு மது லிமாயியே தமிழ்நாட்டுக்கு வந்தும், 'இந்தி யைத் தினிக்கக்கூடாது' என்றும், 'ஆங்கிலத் தைத் தொடர்பு மொழியாகத் தென்னாட்டு மக்கள் கற்பதைத் தடுக்கக்கூடாது' என்றும் (காஞ்சியில்) பேசியிருக்கிறர் என்ருல், தமிழ் மண்ணியேயே பிறந்து, தன்னே 'ஒரு தமிழன்' என்று சொல்லிக்கொள்ளும் 'சுப்பிரமணியம், 'இங்கிதான் தொடர்பு மொழி' என்று பேசு கிறர் என்ருல், அந்த அளவுக்கு அவருக்குப் பதவி வெறியும், அமைப் புத்தியும் தலேக் கேறிவிட்டிருக்கிறது என்றுதான பொருள்!

இனி இப்படிப்பட்டவர்களின் 'வழிகாட்டுதல்' எங்களுக்குத் தேவையில்லே என்றுதான் கடந்த பொதுத் தேர்தலில், இவர்களேயெல்லாம் தூக்கியெறிந்தார்கள் தமிழ் மக்கள்! 'செல் லாக் காசு'களாகிவிட்ட இவர்களிடம், நாவ டக்கான பேச்சையோ, நானயமான நட வடிக்கைகளேயோ யாரும் எதிர்பார்க்கவில்லே ; ஆகையிலல், இவர்கள் எது வேண்டுமானலும் பேசலாம்—எப்படி வேண்டுமானலும் நடக்கலாம்!

—மா. செ.

பஞ்சாப் முதல்வருக்குக் காங்கிரசு வலேவீச்சு!

பஞ்சாப் முதலமைச்சர் கில்லே புடன், அவரது கட்சியையும் காங்கிரசிலு சேர்ந்து விடுமாறு காங்கிரசு மேலிடம் வற்புறுத்து கிறதாம்.

திரு. கில், 'ஜனதா கட்சி' என்ற பெயரில் ஓர் அமைப்பை நடத்தி வருகிறர்.

முதலமைச்சரும் இதர அமைச் சர்களும் ஜனதா கட்சியைக் கலேத்துவிட்டு காங்கிரசில் சேர்ந் தாலன்றி, அவர்கள் தொடர்ந்து பதவியில் நீடிக்கமுடியாது என்றும் காங்கிரசு மிட்டவட்டமாக அறி வித்துவிடும் என்று கருதப்படு கிறது.

இப்போது 'அரியானு' என்ற பெயரில் அமைந்துள்ள மாகிலம், அண்மைக்காலம் வரையில் பஞ் சாப் மாகிலத்தின் ஒரு பகுதியாக இருந்துவந்தது; இப்போதும் அரி யானுவுக்கும்—பஞ்சாப்புக்கும் ஒரே தலேகாரமாக சண்டிகார் இருந்து வருகிறது. எனவே, பஞ்சாபின் அரசியல் நிலேமைகளுக்கேற்பவே அரியானுவின் அரசியல் நிலேமை களும் அமையும் குழ்நிலே உள் ளது.

இங்கிலேயில், அரியானுவில் மறு தேர்தல் நடைபெறவிருப்பதால், பஞ்சாபில் காங்கிரசின் அதிகாரம் இருந்தாலன்றி அரியானு மறுதேர் தலில் காங்கிரசுக்குப் போதிய அளவு வெற்றி நிலேக்காதுஎன்று காங்கிரசு மேலிடம் நினேக்கிறது; இதன் காரணமாகவே, பஞ்சாப் முதலமைச்சரையும் — அவரது கட்சியினரையும் காங்கிரசில் சேர்த்துக் கொண்டுவிட அது விரும்புகிறது.

ஆனல் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலேவர் சுப்பிரமணியம் அவர்களோ, 'உலகத் தமிழ் மாநாட்டிற்காக 2 கோடி ரூபாய்க்கு மேல் வசூலிக்கப்பட்டது' எனப் பழிசுமத்துகின்ருர்!

தமது கூற்றை வலியுறுத்த சுப்பிரமணியம், ஏதாவது சான்று காட்டியிருக்கின்ருரா ?—இல்லே—இருந்தால் அல்லவா காட்ட ?

இந்தப் பழிச்சொல்லுக்கு சுப்பிரமணியத்தின் நாக்குத்தான் சான்று! அவர் மனமேபோன போக்குத்தான் சான்று! அவருக்குள்ள அரசியல் அழுக்காறுதான் சான்று!

'இது என்ன புத்தி' என்ற் தமிழக மக்கள், கேட்கத்தான் செய்வர்!

—கா. கு.

புதுவைப் போலீசாரின் அத்துமீறிய செயல்

காங்கிரசுக் குண்டர்களுக்குத் துணையாகக் காவல் துறை

கழகத் தோழரைத் தாக்கி வழக்கும் தொடர்ந்துள்ள கொடுமை

புதுவையில் காங்கிரசுக்காரர்களின் தூண்டுதலால் கழகத் தோழர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த 23-ந் தேதியன்று புதுவை வட்டம் கிழக்கு வட்டாரம் மீனவர் பகுதியான நரம்பை என்ற கிற்றூரில் கிளைக்கழகப் பிரதிநிதி தனபால் என்பவரைச் சில காங்கிரசுக்காரர்கள் காரணமின்றித் தாக்கியதால் பலத்த காயம் ஏற்பட்டது; உடன் அவர், சம்பந்தப்பட்டவர்கள்பேரில் காவல் துறையினரிடம் புகார் கொடுக்கச் சென்றார்; அந்தப் புகாரை ஏற்க மறுத்து, 'பதிவு செய்ய இயலாது' என்று காவல் துறையினர் திருப்பிவிட்டனர்.

மறுநாள், 'கலவரம்' என்று காங்கிரசுக்காரர் கொடுத்த புகாரின்பேரில் காவல் துறையினர், 6 கழகத் தோழர்களைக் கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டனர்.

தவளக்குப்பம் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவல் துறையினர் 10-பேர்களும் சேர்ந்து கழகத் தோழர்களை, மிதியடியைத் தண்ணீரில் துவைத்து அடித்திருக்கின்றனர்.

உடம்பெல்லாம் தழும்பேறி சோர்ந்து—தள்ளாடி—நடக்க முடியாத நிலையில் கழகத் தோழர் இருந்தும் அவர்களைத் தாக்கியிருக்கின்றனர்.

பொறுப்பில் விடுதலை பெற்ற அந்தக் கழகத் தோழர் போலீசார் புரிந்த கொடுமையை வட்டச் செயலாளரிடம் சொல்லி, கதறியழுத போது, வட்டச் செயலாளர் சண்முகம் நிலை கலங்கினார்.

இதையொட்டி, சம்பந்தப்பட்ட காவல் துறையினர்மீது மத்தியக் காவல் துறைச் செயலாளர் அவர்களிடம் விசாரணை செய்யக் கோரினார்; விசாரணை நடந்துகொண்டு வருகிறது.

கழகத் தொழிற் சங்கச் சாதனை

கோவை முருகன் மில்ஸ் வீவிங் துறையில் பணியாற்றிவரும் தேவராசு, கந்தசாமி, குழந்தைசாமி ஆகிய மூன்று தொழிலாளருக்கும் வேலை நேரத்தில் வீவிங் மிஷின்கள் நின்றுவிட்டதால், நிர்வாகத்தினர் சம்பளம் போட்டுக் கொடுக்காமல் இருந்துவந்தனர். ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 260 தரப்பட வேண்டுமென்று தி. ப. தொ. மு. சங்கச் சார்பில், 19—1—65 அன்று தொழிலாளர் துறை அதிகாரியிடம் வழக்குத் தொடரப்பட்டது.

மூன்று விசாரணைகள் நடைபெற்ற பின், இறுதியாக நடைபெற்ற விசாரணையின் முடிவில், லேபர் கமிஷனர், ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 230 தரப்பட வேண்டுமெனத் தீர்ப்பளித்தார்.

சர்க்கரைப் பற்றாக்குறை

மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு

கோவை மாவட்டம் வீரப்பன்சத்திரம் பேரூராட்சிமன்றத் தலைவர் திரு. எம். இராமசாமி 17-1-68 அன்று மாவட்ட ஆட்சித்தலைவரை ஈரோட்டில் சந்தித்துப் பின்வரும் மனுவைக் கொடுத்தார் :—

"வீரப்பன்சத்திரம் பேரூராட்சியின் மக்கட்தொகை சுமார் 18000; இப்பேரூராட்சியில் சுமார் 9,000 வாக்காளர்கள் மட்டும் உள்ளனர். இவர்களுக்கு இப்பேரூராட்சியின் எல்லைக்குள் 5,000 குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி கார்டுகளுக்கு மாதந்தோறும் 10 அல்லது 15 மூட்டை சர்க்கரை தான் இதுவரை ஒதுக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவற்றினால் ஒரு குடும்பக் கார்டுக்கு அரை கிலோ சர்க்கரை கூடக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறது. இது மிகவும் பற்றாக்குறையாக உள்ளது.

நாடாளுமன்றத்தில் குயரசுத் தலைவர் உரை

வரவு—செலவுத் திட்டத்தொடர் கூட்டம் துவங்கும்

புதுடில்லி, பிப். 6—

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், பிப்ரவரி 12-ந் தேதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார்.

டாக்டர் ஜாகீர் உசேன் இந்தியக் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றபின் இரண்டு அவைகளையும் சேர்ந்த நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் முதல் முறையாக இப்போதுதான் உரையாற்றுகிறார்.

இந்தத் தொடர்க் கூட்டம், மே 10-ந் தேதி வரை நடைபெறுமெனத் தெரிகிறது. ஆனால், மார்ச் மூன்றும் கிழமையிலிருந்து ஒரு திங்களுக்கு நாடாளுமன்ற மேலவைக் கூட்டம் ஒத்திவைக்கப்படும்.

பிப்ரவரி 29-ந் தேதி நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், 1968—69-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வார்.

மத்திய இரயில்வே அமைச்சர் பூனாச்சா, பிப்ரவரி 19-ந் தேதி இரயில்வே நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது.

இந்தியை ஒழித்தது நல்ல முடிவு!

அண்ணா ஆட்சி சிறந்த முறையில் நடக்கிறது

அனந்தன்நம்பியார் பாராட்டு

ஆரணி, பிப். 6—

மொழிப் பிரச்சினையில் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துள்ள முடிவு சரியானது என்றும், அதனைத் தாம் வரவேற்பதாகவும் இடதுசாரிக் கம்யூனிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர் அனந்தன்நம்பியார் தெரிவித்திருக்கிறார்.

திருவண்ணாமலை பெரிய கோபுரத் திடலில் நடந்த இரயில்வேத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி சிறந்த முறையில் நடைபெறுகிறது. இங்கு காங்கிரசல்லாத கட்சியான தி. மு. கழகம் ஆட்சி செய்வதால், அதன் செல்வாக்கைக் குறைக்கப் பல வழிகளிலும் டெல்லி அரசு முயற்சி செய்கிறது; ஆனால் அது பலிக்கவில்லை—பலிக்கவும் பலிக்காது!

"தி. மு. க. ஆட்சிக்கு எங்கள் ஆதரவு என்றும் உண்டு; அண்ணா ஆட்சி எப்போதும் தொழிலாளர் பக்கமே இருக்க வேண்டும்."

தமிழில் விஞ்ஞானக் கல்வி

அரசினர் கல்லூரிகளில் ஏற்பாடு

சென்னை, பிப். 7—

வரும் கல்வி ஆண்டிலிருந்து தமிழகத்திலுள்ள 19 அரசினர் கல்லூரிகளிலும் புகுமுக வகுப்பில் விஞ்ஞான பாடங்களைத் தமிழில் சொல்லித் தரக் குறைந்தது ஒரு பிரிவாவது இருக்கும்.

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் கூட்டியிருந்த சென்னை — மதுரை — அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், மற்றும் நகரில் உள்ள கல்லூரி முதல்வர்கள் கூட்டத்தில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

"அரசினர் கல்லூரி புகுமுக வகுப்புக்களில் விஞ்ஞானம் அல்லாத பாடங்களுக்குத் தமிழே பாடமொழியாக இருக்கும்; விஞ்ஞானப் பாடங்களுக்கு ஆங்கில பாட மொழிப் பிரிவும் இருக்கும்" என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தென்னகத்துக்கு வந்து பார்க்க வெளிநாட்டினர் ஆவல்

இந்திய அரசு அதிகாரிகளின் தட்டிக்கழிப்பு

புதுடில்லி, பிப். 6—

தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் வர்த்தக வளர்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளும், செய்தியாளர்களும் தென்னாட்டிற்கு வருகைதர வேண்டும் என்று பெரிதும் விருப்பம் கொண்டுள்ளனர்.

டெல்லியைச் சுற்றியுள்ள மாநிலங்களுக்குச் செல்ல அவர்களுக்கு விருப்பமில்லை; ஏனெனில், டெல்லியில் என்ன கண்டனரோ அவைகளைத்தான் அங்கும் காணவேண்டியிருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

எனவே, தென்னாட்டுச் சிற்பங்களையும், தென்னக மக்களின் வாழ்க்கை முறையையும் தெரிந்துகொள்ள அவர்கள் விரும்புகிறார்கள்!

ஆனால், மத்திய அரசின் செய்தி—விளம்பரத்துறை, அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளின் ஆவலை நிறைவு செய்ய இயலாத நிலை இருப்பதாகத் தெரிகிறது.

சென்னை, மைசூர், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் நடைபெற்றுவரும் மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி—ஆந்திர, மைசூர் மாநிலங்களில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம்—கேரளத்தில் பொதுவுடைமைக் கட்சியின் கீழ் நடைபெற்றுவரும் கூட்டணி ஆட்சி ஆகிய இவைகள், அந்நிய நாட்டுப் பிரதிநிதிகள் தென்னாட்டு வருவதற்கு தடையாக இருப்பதாக மத்திய அரசு செய்தி—விளம்பரத் துறை அமைச்சகம் கருதுவதாகத் தெரிகிறது.

இந்த மாநாடு இன்னும் இரண்டு திங்களுக்கு நடைபெறவிருப்பதால் தென்னாட்டில் அப்போது அமைதி நிலவுமானால் அந்நிய நாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தென்னாட்டுச் சுற்றுப்பயண நிகழ்ச்சியை ஏற்படுத்தித் தருவதாக மத்திய அரசு குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

'ஹோம் ரூல்'---(தி.மு.க. ஆங்கில வார இதழ்)

வளர்ச்சி நிதிக்காக

9—2—68 வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருவல்லிக்கேணி என். கே. டி. கலா மண்டபத்தில்

திரு. எம். ஜி. இராமச்சந்திரன்

அவர்கள் முன்னிலையில்

மாண்புமிகு முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையில்

செல்வி ஜெயலலிதாவின்

காவிரி தந்த கலைச்செல்வி

நாட்டிய நாடகம் நடைபெறும்.

நன்கொடை : 100, 25, 10, 5, 3

டிக்கெட்டுகள் 9—2—68 வெள்ளி மாலை 3-மணியிலிருந்து என். கே. டி. கலா மண்டபத்தில் கிடைக்கும்.

வியட்நாம் போரில் அமெரிக்கா வெற்றி பெறுமா?

'சுதந்தர உணர்வை ஒடுக்க இயலா'தெனக் கருத்தறிவிப்பு

புதுடில்லி, பிப். 6—

"தென் வியட்நாமில் 'வியட்காங்' விடுதலைப் போராட்ட வீரர்களிடம் அமெரிக்கப் படைகள் விரைவில் தோல்வி அடையப் போவது உறுதி" என்று, வட வியட்நாம் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

"அமெரிக்காவும் அதன் கையாட்களும், வியட்நாம் மக்களின் சுதந்தர உணர்ச்சியை ஒடுக்கத் தொடர்ந்து குண்டு வீசி வந்தபோதிலும், இறுதியில் தோல்வியடைவது உறுதி" என்று அவர் சொன்னார்.

"தென் வியட்நாமின் கிராமியப் பகுதிகள், வியட்காங் விடுதலைப் போராட்ட வீரர்களின் வசம் இருக்கின்றன; தென் வியட்நாம் படையிலிருந்து வீரர்கள் வெளியேறி, 'வியட்காங்' விடுதலைப் படையில் சேர்ந்து வருகிறார்கள்" என்று வட வியட்நாம் அதிகாரி சொன்னார்.

"வியட்நாமில் அமெரிக்கா போரில் ஈடுபட்டிருப்பதைப் பல நாடுகள் கண்டித்துவருகின்றன; அமெரிக்காவின் வியட்நாம் கொள்கை குறித்து அங்கேயே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை மக்நமராவின் பதவி விலகல் காட்டுகிறது; சைகோன் நகரில் அமெரிக்கத் தூதரகத்தை வியட்காட் தற்கொலைப் படையினர் முற்றுகையிட்டுக் கைப்பற்றியது அவர்களின் சுதந்தர வேட்கைக்கு எடுத்துக்காட்டு" என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடியேற்றம் நகர எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்

குடியேற்றம் நகர எம். ஜி. ஆர். ரசிகர் மன்ற நிர்வாகிகள் தேர்தல் திரு. ஜி. துளசிராமன் தலைமையில் நடைபெற்றபோது, தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : மு. க. மெய்ஞானம்; செயலாளர் : ஜி. கண்ணாயிரம்; துணைச்செயலாளர் : ஜி. கிருட்டினன்; பொருளாளர் : ஜி துளசிராமன்; மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னை 44-வது வட்ட திருவள்ளுவர் மன்றம்

சென்னை—44-வது வட்டம் திருவள்ளுவர் மன்றப் புதிய நிர்வாகிகள் தேர்தல், ஆர். ஜி. நாதன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : எடின்ராசன்; செயலாளர் : கே. இ. மாறன்; துணைச் செயலாளர் : ஏ. எம். முனுசாமி; பொருளாளர் : த. சா. மூர்த்தி; மன்ற பொறுப்பாளர் : டி. இப்ராகிம்; செயற்குழு உறுப்பினர்கள் : து. மணியரசன், மு. சந்திரன்.

லால்குடி ஊராட்சி ஒன்றியச் சீரணியினர் சிறப்புமிக்க பணி

லால்குடி ஊராட்சி ஒன்றியம் சீரணியினர் 31—1—68 அன்று லால்குடி கொள்ளிடம் சாலையில் (இடையாற்றுமங்கலம் அருகில்) கொள்ளிடம் கரையேறுமிடத்தில், சறுக்கை அமைத்து சாலையைச் சீர்செய்து சாலை அமைத்துள்ளனர்.

இந்தப் பணியில் லால்குடி ஊராட்சி ஒன்றியச் சீரணியினரும், பொதுமக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் 150-பேர்கள் பங்கு கொண்டனர்.

மேற்படி வேலையின் மதிப்பு ரூ. 1,000 பெறும் என்று கணக்கிடப்படுகிறது.

மேற்படி வேலையை முசிறி கோட்டாட்சித் தலைவரும், ஒன்றிய ஆணையரும் மேலாளரும், லால்குடி சட்டமன்ற உறுப்பினரும் வந்திருந்து பார்வையிட்டு ஊக்கப்படுத்தினர்.

சீரணியின் சிறந்த பணி கண்டு பொதுமக்கள் அனைவரும் பாராட்டிச் சென்றனர்.

எனவே, ஒரு குடும்பக் கார்டுக்கு மாதம் ஒரு கிலோ சர்க்கரையாகக் கிடைக்குமாறு கோட்டாவின் எண்ணிக்கையை அதிகப்படுத்த உத்தரவு வழங்குமாறு மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்" என்று அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

பொருட்காட்சியில் நடனமாடும் நீருற்று!

சென்னை, பிப். 7—

இந்திய வணிக—தொழில் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள மேற்கு ஜெர்மன் காட்சிக் கூடாரம் அனைவரையும் ஈர்க்கக்கூடியது; இக்கூடாரம் 13 மீட்டர் உயரமுடையது; சுமார் 1000 சதுரமீட்டர் பரந்து விரிந்திருக்கிறது.

இந்த அரங்கைச் சுற்றிலும் தண்ணீர் சூழ்ந்திருக்கிறது. இத்தண்ணீரில் ஓர் இடத்தில் 'இசைக் கருவி' ஒன்று பொருத்திவைக்கப்பட்டிருக்கிறது; அங்கே ராகங்களுக்கு ஏற்றபடி நீருற்றுக்களே நடனமாடுகின்றன!

ஜெர்மனிக் கூட்டாட்சிக் குடியரசின் பொருளாதாரத்தையும், பண்பாட்டையும் சித்தரிக்கும் திரைபடங்கள் ஒருபுறம் காட்டப்படும்.

ஜெர்மனியிலிருந்து ஏற்றுமதிக்குரிய சரக்குகளைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் 24 பேர் இந்த அரங்கில் தங்களுடைய சரக்குகளைக் காட்சிக்கு வைத்திருக்கிறார்கள்; பல்வேறுவிதமான தரமான இயந்திரங்கள், நுட்பக் கருவிகள், மின் சாதனங்கள், செய்திப் போக்குவரத்துக்குரிய நூதனக் கருவிகள் முதலியன முக்கியமானவை.

இந்தியையும் திணித்து ஒற்றுமையும் பேண வேண்டுமாம்!

இந்திவெறி தலைக்கேறிய டில்லி அமைச்சரின் கூற்று

புதுடில்லி, பிப். 7—

"தென்னகத்தில் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி எவ்வளவுதான் கடுமையாக இருந்தாலும், அதைக் காரணமாகக் கொண்டு தென்னகம் தனித்துப் போய்விடுவதை மத்திய அரசு அனுமதிக்காது; இந்தி ஒன்றுதான் நாட்டின் இணைப்பு மொழியாக இருக்கமுடியும்"

என்று மத்திய கல்வித்துறைத் துணையமைச்சர் கே. பி. மிஸ்ரா, நிருபரிடம் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தி இணைப்பு மொழியாக இருப்பதைக் காரணம் காட்டி தமிழகம் தன்னைத் 'தனிமை'ப் படுத்திக் கொள்ளுமானால் அதை மத்திய அரசு அனுமதிக் காது.

"இளைஞர்கள் முயற்சி செய்வார்களேயானால் நாடெங்கிலும் இந்தி மொழி பயன்படுத்துவது நாளடைவில் அதிகரிக்கும்.

"தென்னகத்தில் மக்களுக்கு இந்தி புரியவில்லை என்று கூறப்படுவது சரியல்ல; அண்மையில் நான் தென்னாட்டில் சுற்றுப்பயணம் செய்தபோது, ஓர் இடத்தில்கூட இந்தி தெரியாதவர்களைச் சந்திக்கவில்லை. தென்னாட்டவர்களுடன் கருத்துப் பரிமாறிக் கொள்வதில் எனக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை.

"தேசிய ஒருமைப்பாடு நீடிக்க மாநிலங்களிடையே ஒற்றுமையுணர்வு நிலவவேண்டியது அவசியமாகும்."

கல்லூரியும், கலைக் கல்லூரியும் கால வரையறையின்றி மூடப்பட்டிருக்கின்றன.

"இந்தித் திணிப்பைக் கைவிடத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் வரையில் கல்லூரிகளுக்குச் செல்லமாட்டோம்" என்று மாணவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

திருப்பதியில் உள்ள மாணவர்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி இன்று அஞ்சலகங்கள், பேருந்து நிலையங்கள் முன் மறியலில் ஈடுபட்டனர்.

தமிழகச் சட்டமன்றம் அண்மையில் நிறைவேற்றிய தீர்மானத்தைப் போன்ற ஒரு தீர்மானம் ஆந்திரச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால் தங்களுடைய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கைவிடுவதாக மாணவப் பிரதிநிதிகள் அறிவித்திருக்கின்றனர்.

சித்தூர் மாவட்டத்தில்

ஐதராபாத், பிப். 6—

சித்தூர் மாவட்டத்தைச் சார்ந்த வாயலபாத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு தள்ளிவைக்கப்படுவதற்கான உத்தரவை அறிவிக்கும் வரை இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்த இங்குள்ள மாணவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

கோரூர், இராசமகேந்திரபுரம் ஆகிய ஊர்களைச் சார்ந்த 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் நிடதவோல் இரயில்வே நிலையத்தில், சென்னை—அவுரா எக்ஸ்பிரஸ், சர்க்கார் எக்ஸ்பிரஸ் ஆகிய இரயில்களை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ததாகத் தெரிகிறது.

புதுவை முதல்வருக்கு மாணவர் உறுதிமொழி

புதுவை, பிப். 7—

பிப்ரவரி 8-ந் தேதியன்று புதுவையிலுள்ள எல்லாப் பள்ளிகளும் கல்லூரிகளும் திறக்கப்படும் என்று தெரிகிறது.

மாணவர்கள் முதலமைச்சருக்கு அளித்த உறுதிமொழியின் பேரில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

கருநாடகத்தில் இந்தி எதிர்ப்பு

கல்வி நிலையங்கள் மூடப்பட்டன

ஷிமோகா, பிப். 6—

ஷிமோகாவிலுள்ள சகயாத்ரி கல்லூரி மாணவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து பெரிய ஊர்வலம் நடத்தினர்.

நகரிலுள்ள பள்ளிகள், கல்லூரிகள் அனைத்தும் மூடப்பட்டன.

இந்தியை எதிர்த்தும், போலீசு நடவடிக்கைகளைக் கண்டித்தும் மாணவர்கள் முழக்கமிட்டனர்; 'கன்னடம் ஆட்சிமொழியாக வேண்டும்' என்றும் கோரினர்.

இந்தி சினிமா விளம்பரங்களை மாணவர்கள் கீழே தள்ளி தீயிட்டனர்.

நெல்லூரில் கடையடைப்பு - வேலைநிறுத்தம்

நெல்லூர், பிப். 6—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடர்ந்து இன்று மாணவர்கள் வேண்டுகோளையொட்டி இங்கு பொது வேலைநிறுத்தமும், கடையடைப்பும் நடைபெற்றன.

நெல்லூரில் உள்ள எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; எல்லாப் போக்குவரத்துகளும் இன்று நிறுத்தப்பட்டன.

இங்குள்ள அரசாங்கப் பாலிடெக்னிக் அருகில் ஏறத்தாழ 150 லாரிகளை மாணவர்கள் நகருக்குள் நுழையவிடாமல் தடுத்துவிட்டனர்; இதைத் தொடர்ந்து இங்கு தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாகத் தாலுகா மாஜிஸ்திரேட்டால் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றிரவு தடுப்புக் காவலுக்காக 40 சமூகவிரோதிகளைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

இரயில்வே பாதைத்திற்கு அருகில் இருமுறை ஆர்ப்பாட்டக்காரர்களைப் போலீசார் கலைத்தனர்; இங்கும் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆந்திரத்தின் பல்வேறு நகரங்களிலும் முழு அர்த்தால் நடைபெற்றதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

திருப்பதியில் மறியல்

திருப்பதி, பிப். 6—

வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பொறியியல்

நடிகர் சங்கத் தலைவரானார் கே. ஆர். இராமசாமி

சென்னை, பிப். 6—

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் புதிய தலைவராக நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நடிகர் சங்கத் தலைவர் தேர்தல் இன்று காலை நடைபெற்றது.

மற்ற நிர்வாகிகள் தேர்தல் இம்மாதம் 13-ம் நாள் நடைபெறும்.

ஆணையிட்டுவிட்டால் நிறைவேறிவிடுமா?

இந்தி மாநில அதிகாரிகளிடை குழப்பம் நிலவுகிறது!

புதுடில்லி, பிப். 7—

இந்த சனவரி 26-ம் நாளிலிருந்து மாநில அரசாங்க அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும் எல்லா அலுவல்களும் இந்தியிலேயே நடைபெற வேண்டும் என்று உத்தரப் பிரதேச அரசு ஆணையிட்டிருந்தபோதிலும், நடைமுறையில் அது இயலக் கூடியதல்ல!

'எல்லா அலுவல்களும் இந்தியிலேயே நடைபெற வேண்டும்' என்ற உத்தரவு, அதிகாரிகளிடையே பெருங் குழப்பத்தைத்தான் தோற்றுவித்திருக்கிறது!

அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் இந்தியிலேயே மேற்கொள்ள அரசு ஊழியர்கள் தேர்ச்சி பெறுவதற்கு மாநில அரசு ஆறு மாத கால அவகாசமளித்துள்ளது; ஆனால், 'ஆறு மாத காலத்தில் 25 சதவிகித அளவுக்குத்தான் இதில் தேர்ச்சி பெறமுடியும்' என்று அரசாங்க ஊழியர்கள் கருதுகின்றனர்.

"ஏதோ மாயாஜால வித்தை போல் உடனடியாக எல்லா அலுவல்களையும் இந்தியிலேயே நடத்தத் தொடங்கிவிட முடியாது" என்று அரசாங்க அதிகாரிகள் எண்ணுகின்றனர்.

மாநில வருவாய்த் துறையிலும், நீதிமன்றங்களிலும் அதிகாரிகள் இப்போது இந்தியில் கையொப்பமிடுகின்றனர் என்றாலும், குறிப்புக்களையெல்லாம் ஆங்கிலத்தில்தான் எழுதிவருகின்றனர்.

பத்து ரூபாய் வெள்ளி நாணயம்

இந்திய அரசு வெளியிடுமாம்

புதுடில்லி, பிப். 6—

பத்து ரூபாய்க்கு வெள்ளி நாணயம் வருகிறது. இந்த ஆண்டு இங்கு இரண்டாவது அனைத்து நாட்டு உணவு மாநாடு நடைபெறுகையில், இந்த மாநாட்டின் நினைவாக இந்தப் புதிய வெள்ளி நாணயத்தை வெளியிட இந்திய அரசு உத்தேசித்துள்ளதாம்.

"உலகின் உணவு, வேளாண்மைப் பிரச்சினைகளில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்த நாணயத்தை வெளியிடலாம்" என்று முதலில் உணவு—வேளாண்மை நிறுவனமே மத்திய அரசுக்கு யோசனை கூறியது.

இதுவரையில் ஒரு ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள நாணயம் வெளியிடப்பட்டதில்லை. ரூபாயின் உண்மையான மதிப்புக் குறைந்து கொண்டிருந்ததற்குத் தகுந்தவாறு ரூபாயில் அடங்கிய வெள்ளியும் குறைந்துகொண்டே வந்திருக்கிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள பத்து ரூபாய் வெள்ளி நாணயத்தின் குறுக்களவு 34 மில்லி மீட்டர் (ஒன்றேகால் அங்குலத்திற்குச் சற்று அதிகம்) இருக்கும்.

நாணயத்தின் ஒரு பக்கத்தில் அசோகத் தூண் பொறிக்கப்பட்டிருக்கும்; மற்றொரு பக்கத்தில் உணவு—வேளாண்மை நிறுவனம் அல்லது 'எல்லோருக்கும் உணவு' என்ற சொற்றொடர் ஆங்கிலத்திலும் இந்தியிலும் நாணயத்தைச் சுற்றி விளிம்பில் பொறிக்கப்பட்டிருக்குமாம்.

இந்த நாணயம் எவ்வாறு அமைந்திருந்தால் நன்றாக இருக்கும் என்பதற்கு மாதிரிப் படங்கள் அனுப்பிவைக்குமாறு பொதுமக்களை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

பொறுக்கி எடுக்கப்படும் சிறந்த மாதிரிக்கு ஆயிரம் ரூபாய் பணம் பரிசு வழங்கப்படும்.

தமிழகத்தில் மின்சாரத் தட்டு

நிலைமையைச் சமாளிக்க அரசு ஏற்பாடு

சென்னை, பிப். 7—

மேட்டூர், பெரியாறு நீர்த் தேக்கங்களில் நீர் மட்டம் மிகக் குறைந்துவிட்டதால் அவ்விரண்டு மின்சார உற்பத்தி நிலையங்களும் மூடப்பட்டுவிட்டன.

எனினும், இதனால் மாநிலத்துக்கு மின்சார சப்ளை பாதிக்கப்படாது.

மைசூரிலிருந்து மின்சார சப்ளை பெறத் தமிழக அரசு சமீபத்தில் உடன்பாடு செய்து கொண்டிருப்பதால், தமிழகத்துக்குத் தொடர்ந்து சப்ளை கிடைத்துவரும்.

புதிய பேரங்காடிகள்

மாவட்டந்தோறும் திறக்க ஏற்பாடு

சென்னை, பிப். 7—

வடசென்னை பேரங்காடி (சூப்பர் மார்க்கெட்) ஏப்ரல் முதல் வாரம் திறக்கப்படலாம்; சட்டக் கல்லூரிக்கு எதிரே தற்போது கட்டப்பட்டுள்ள 'குறளகக்' கட்டிடத்தில் இந்தப் பேரங்காடி இருக்கும்.

வேலூரில் பேரங்காடி பிப். 11-ல் துவக்கிவைக்கப்படும்; கோட்டையை ஒட்டியுள்ள 'ஜவான் பவனி'ல் இந்தப் பேரங்காடி இருக்கும்.

அடுத்த சில மாதங்களில் தமிழ்நாட்டில் மேலும் 5 பேரங்காடிகள் திறக்கப்படும்; கடலூர், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில் ஆகியவற்றில் திறக்கப்படும்.

இவையும் திறக்கப்பட்டு விட்டால் நீலகிரி, செங்கற்பட்டு, தர்மபுரி தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும் பேரங்காடிகள் இருக்கும்.

மிகப் பெரிய கடத்தல்

பம்பாயில் பறிமுதல்

பம்பாய், பிப். 6—

பம்பாயிலும், பம்பாய்க்கு அருகில் உள்ள 'ஊரன்' என்ற இடத்தில் மோராபந்தரிலும் ரூ. 62-இலட்சம் பெறுமான கடத்தல் பண்டங்களை இலஞ்ச ஊழல் எதிர்ப்புப் பிரிவு பறிமுதல் செய்துள்ளது.

இந்தக் கடத்தல் பண்டங்களில் தங்கக் கைக் கெடிகாரங்கள், மற்றும் ஆடம்பரப் பொருள்கள் இருந்தன.

இந்த ஆண்டில் இதுவரை இவ்வளவு பெரிய அளவில் கடத்தல் பண்டங்கள் சிக்கியிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

நிலநடுக்கப் பகுதியில் மறுவாழ்வளிப்பு

ரூ. 16 கோடியில் திட்டம்

காரட், பிப். 7—

மகாராட்டிர மாநிலத்திலுள்ள கொய்னா நகர், சதாரா பகுதிகள், இரத்தினகிரி மாவட்டம் ஆகிய இடங்களில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க ரூ. 16 கோடி அளவில் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாக இங்கு நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் மகாராட்டிர முதலமைச்சர் வி. பி. நாயக் அறிவித்தார்.

அடுத்த பருவ காலத்திற்குள் 60,000 புதிய வீடுகளும், அதற்கு இணையான வீடுகள் புதுப்பிக்கப்படுவதற்கான செயல்முறைகளைக் கொண்டது இத்திட்டம் என்று தெரிகிறது.

சென்னை, பிப். 6—

நாய்களுக்கு அலங்காரம் செய்ய ஓர் அலங்கார நிலையம் சென்னையில் அமைக்கப்படவிருக்கிறது.

இதுபோன்ற நிலையங்கள் பெங்களூரிலும், சிம்லாவிலும் இருக்கின்றன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

9—2—68

பம்பாய்—தாராவி

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு கணேசர் திடலில்; தலைவர்: த.மு. பொற்கோ; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி, திருப்பணி சங்கர், பி. எஸ். செல்லையா, உ.அ. செல்லையா.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

பிப். 8 காலை 11 மணி: கோவை 'சித்ரா' ஆண்டுவிழாவில் பங்கேற்பு; மாலை 3 மணி: பெரியநாயக்கன்பாளையம் இரங்கசாமி பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4-30 மணி: வட கோவை நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு.

வெ. கண்ணன் சுற்றுப்பயணம்

பிப். 8: ஒரத்தநாடு; 9: அறந்தாங்கி; 10: இடைப்பாடி; 11: சேலம்; 14: அவினாசி; 15, 16: குன்னூர் வட்டம்; 18: பெங்களூர்; 25: செங்கோட்டை; 28: இளங்கடம்பனூர்.

கழக நாடாளுமன்ற உறுப்பினர்

ம. கமலநாதனுக்குக் கார் பரிசளிப்பு

கிருஷ்ணகிரித்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ம. கமலநாதனுக்கு, தொகுதி மக்கள் சார்பில் கார் பரிசளிப்பு விழா 9-2-68 மாலை 6 மணிக்கு கிருஷ்ணகிரி கார்னேஷன் திடலில் நடைபெறும்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.வி. சீராமுலு தலைமையில் இந்த விழா நடைபெறும்.

உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் காரினை அளித்துப் பாராட்டுரை வழங்குவார்.

நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன், க. இராசாராம் எம்.பி., எச்.எல். முருகேசன் (மாவட்டச் செயலாளர்), எம். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., எம்.வி. கரிவேங்கடம், ஆர். வெங்கடாசலம் எம்.எல்.சி., கே.வி. துரைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

எஸ். எஸ். மாரிசாமி உயிர் தப்பினார்

சென்னை, பிப். 6—

தமிழ்நாடு சுதந்தரக் கட்சி செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ். எஸ். மாரிசாமி பயணம் செய்த கார் தீப்பற்றியது; அவர் காயம் ஏதுமின்றி உயிர் தப்பினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்வதற்காக எஸ். எஸ். மாரிசாமி இன்று காலை கார்மூலம் பயணமானார். செங்கற்பட்டுக்கு அருகில் அவர் பயணம் செய்த கார் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டது.

அருகிலிருந்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஓடிவந்து மாரிசாமியையும், பயணம் செய்த மற்றொருவரையும் காப்பாற்றினார்கள்.

காருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது; மாரிசாமியும், மற்றவர்களும் வேறு கார்மூலம் சென்னை திரும்பினர்.

சித்தூரில் கைதானவர்கள் விடுதலையாயினர்

ஐதராபாத், பிப். 7—

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையொட்டி பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட சித்தூர் நகராட்சித் தலைவர் எம். எஸ். இரசேந்திரன், நகராட்சி தி.மு.க. உறுப்பினர் கே. எம். எர்ரய்யா உள்ளிட்ட நால்வரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகத் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிவகம் அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

முகவரி

கா. சுப்ரவேலு எம்.பி.,
38, வாத்துக்காரத் தெரு,
கூறைநாடு, மாயூரம்.